# கோபிசெட்டிபாளையம் நகராட்சி
# 08.04.2022 ஆம் தேதி நடைபெற்ற அவசரக்கூட்ட நடவடிக்கைகள்
# தீர்மான நகல்

1. தமிழ்நாடு அரசு அரசிதழ் (சிறப்பு) எண்.194 நாள்.30.03.2022 மற்றும் அரசாணை (நிலை) எண். 52 நாள்.30.03.2022 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை இல் அனைத்து நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் சொத்து வரி பொது சீராய்வு செய்து 2022-2023 (01.04.2022) முதலாம் அரையாண்டு முதல் மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்திட உத்திரவிடப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1 நாள்.01.04.2022 இல் மேற்படி சொத்து வரி மற்றும் காலியிட வரி எவ்வாறு நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என வழிகாட்டு நெறிமுறைகள் அளிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட தமிழ்நாடு அரசு அரசிதழ் (சிறப்பு) எண்.194 நாள்.30.03.2022 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை அரசாணை (நிலை) எண். 52 நாள்.30.03.2022, மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1 நாள்.01.04.2022 ஆகியவை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண். 684/2022/அ1)

**அலுவலக குறிப்பு :-** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
**பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது. மன்றத்தீர்மான எண். 28**

2. தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

15-ஆவது மத்திய நிதி ஆணையம், 2022-2023-ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e.Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை(நிலை)எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019-ன் படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து,பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும்,நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022-2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>சொத்துவரி:</u>**

**குடியிருப்பு கட்டடங்கள்(Residential Building) :**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601–1200 | 1.5 |
| 1201–1800 | 1.75 |
| >1800 | 2 |

**குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(Non–Residential Building) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:**

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

**<u>காலிமனை வரி சீராய்வு:</u>**

காலிமனை வரிவிதிப்பிற்கு,1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**<u>தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:</u>**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டடுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ. எண். | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி(Current Liabilities) (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | 0.46 |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம் | 1.32 |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் ( டுபிட்கோ, டுபிசெல், பிற) | 22.97 |
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி, நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் ( நிலுவைத் தொகை) | 3.64 |
| | **மொத்தம்** | **28.39** |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81–A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

1) 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
7) காலிமனை வரிவிதிப்பிற்கு,1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.
8) ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

மேலும் தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யாமல் விடுபட்டுள்ள சாலைகள் / தெருக்கள் / சந்துகள் ஆகியவற்றிற்கு கீழ்கண்டவாறு மண்டலங்கள் நிர்ணயம் செய்யலாம்.

| வ.எண் | வார்டு | தெருக்களின் பெயர்கள் | கதவு எண்கள் | மண்டலம் |
|---|---|---|---|---|
| 1 | 1 | பொன் நகர் | முழுவதும் | B |
| 2 | 3 | பைரவர் நகர் | முழுவதும் | B |
| 3 | 3 | ஆபிசர் அவென்யூ | முழுவதும் | B |
| 4 | 3 | பரணி நகர் | முழுவதும் | B |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | 4 | மணிஸ் நகர் | முழுவதும் | B |
| 6 | 11 | லட்சுமி கார்ட்டன் எக்ஸ்டன்சன் | முழுவதும் | B |
| 7 | 14 | முத்து வேலப்பன் நகர் எக்ஸ்டன்சன் | முழுவதும் | B |
| 8 | 24 | சுவாமி நகர் | முழுவதும் | B |
| 9 | 29 | ஸ்ரீநிநிவாசா கார்ட்டன் | முழுவதும் | B |
| 10 | 30 | ஸ்ரீ அருணாச்சல நகர் | முழுவதும் | C |

**அலுவலக குறிப்பு:–**

கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதி பொது மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், நகராட்சியின் நிதிநிலையினை உயர்த்தவும், அரசாணை(நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர் நாள்.01.04.2022– ல் தெரிவித்துள்ளவாறு சொத்து வரி மற்றும் காலிமனை வரி பொது சீராய்வு செய்து வரி உயர்வு செய்யவும், மேலும் அரசாணையின் படி மண்டலம் D பகுதியானது மண்டலம் C பிரிவுக்கு கொண்டு செல்லவும் மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண்.684/2022/அ1)

**01.04.2022 முதல் சொத்து வரி பொது சீராய்வு வரி உயர்வு செய்தல், நடவடிக்கைக்கு வருகை புரிந்த 29 நகர்மன்ற உறுப்பினர்களில் அ.இ.அ.தி.மு.க. வைச் சார்ந்த 12 நகர்மன்ற உறுப்பினர்கள் மட்டும் எதிர்ப்புத் தெரிவித்து வெளி நடப்பு செய்தார்கள் மீதம் உள்ள. தி.மு.க. நகர்மன்ற உறுப்பினர்கள் 14, காங்கிரஸ் நகர்மன்ற உறுப்பினர்கள் 2 மற்றும் சுயேட்சை நகர்மன்ற உறுப்பினர் 1 ஆக மொத்தம் 17 நகர்மன்ற உறுப்பினர்களால் அரசாணைக்கு இணங்க இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 01.04.2022 முதல் சொத்துவரி / காலிமனை வரி பொது சீராய்வு செய்து வரி உயர்வு செய்திட மன்றத்தின் அனுமதியளிக்கப்பட்டது. மேலும், அரசாணையின் படி மண்டலம் "D" பகுதியானது மண்டலம் "C" பிரிவுக்கு கொண்டு செல்லவும், அனுமதிக்கப்பட்டது. தீர்மானம் எண். 29**

3. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 26 சிவசண்முகம் வீதியில் உள்ள பெண்கள் கழிப்பிடத்திற்கு ஆழ்துளை கிணற்றில் கம்ரசர் மோட்டார் வைத்து தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது. மேற்படி மின்மோட்டார் பொருத்தப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. அதேனால் அடிக்கடி பழுது ஏற்பட்டு தற்போது பழுதினை சரிசெய்து இயக்க முடியாத நிலையில் உள்ளது மற்றும் மோட்டார் அறை தகரத்தால் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் மின்கசிவு ஏற்பட்டால் பொதுமக்கள் பாதிக்கும் நிலை ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, மேற்படி ஆழ்துளை கிணற்றில் புதிதாக நீர்மூழ்கி மின்மோட்டார் பொருத்தி, மீட்டர் ரூம் அமைத்து கழிப்பிடத்திற்கு தண்ணீர் வசதி செய்திட மதிப்பீட்டு செலவினம் ரூ. 1.10 இலட்சம் ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்ளவும், செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது. தீர்மானம் எண். 30**

4. இந்நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் விநியோக திட்டத்தில் 10 மேல்நிலை நீர் தேக்க தொட்டிகள், 117.64 கி.மீ. நீளத்திற்கு குடிநீர் விநியோக குழாய்கள், 195 பொது குடிநீர் குழாய்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து 6.0 கி.மீ. நீளத்திற்கு 3 பிரதான நீர் உந்து குழாய்கள் தனித்தனியே உள்ளது. மேலும் 11998 வீட்டு குடிநீர் இணைப்புகள் மற்றும் 277 ஆழ்துளை கிணறுகளும் உள்ளது.

மேற்படி குடிநீர் விநியோக திட்டத்தில் குடிநீர் பிரதான குழாய்கள் மற்றும் குடிநீர் விநியோக குழாய்கள் ஆகியவற்றில் ஏற்படும் வெடிப்புகள், கசிவுகள் மற்றும் மாற்றுதல் பணிகள் பராமரிப்பு செய்திட நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாத கரணத்தால் குடிநீர் அவசர அவசியம் கருதி தடையின்றி குடிநீர் விநியோகம் செய்திட தனியார் சேவையை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகளை 2022 – 23 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ. 9,90,000/– (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொன்னூறு ஆயிரம் மட்டும்).

மேற்படி பணியினை தனியார் சேவை மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேற்கொள்ளவும், செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது. தீர்மானம் எண். 31**

5. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குள் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சி (ODF +) என புதுப்பிக்க (Re Certification ) சான்று SBM திட்டத்திலிருந்து பெறுவதற்கு இந்நகராட்சி பகுதியில் உள்ள கீழ்காணும் பொது கழிப்பிடத்தில் மற்றும் சமுதாய கழிப்பிடத்தில் மற்றும் சமுதாய கழிப்பிடங்களில் பயன்படுத்துபவர்களுக்கு தண்ணீர் குழாய் வசதியுடன் கூடிய வாஷ் பேசின்கள் அமைத்து தர வேண்யுள்ளது.

**சமுதாய கழிப்பிடம்**

| | | |
|---|---|---|
| 1. எல்.ஐ.ஜீ காலணி – ஆண் , பெண் | – | வார்டு எண். 8 |
| 2. ஸ்ரீராமபுரம் – ஆண் , பெண் | – | வார்டு எண். 1 |
| 3. ராமர் எக்ஸ்டன்சன் –3 – பெண் | – | வார்டு எண். 2 |
| 4. மாதேஸ்வரன் கோவில் வீதி – பெண் | – | வார்டு எண். 5 |
| 5. விவேகானந்தர் வீதி – ஆண், பெண் | – | வார்டு எண். 4 |
| 6. புதுசாமி கோவில் வீதித – ஆண், பெண் | – | வார்டு எண். 13 |
| 7. வள்ளியத்தா மேடு (கபிலர் வீதி)–ஆண், பெண் | – | வார்டு எண். 15 |
| 8. நேரு வீதி – ஆண் ,பெண் | – | வார்டு எண். 18 |
| 9. கொமரப்பன் வீதி – ஆண் , பெண் | – | வார்டு எண். 18 |
| 10. கரட்டூர் மெயின் ரோடு – ஆண் ,பெண் | – | வார்டு எண். 18 |
| 11. கோகுலம் கார்டன் –ஆண், பெண் | – | வார்டு எண். 19 |
| 12. பஜனை கோவில் வீதி –ஆண், பெண் | – | வார்டு எண். 16 |
| 13. சிவசண்முகம் வீதி 1 – ஆண் | – | வார்டு எண். 26 |
| 14. சிவசண்முகம் வீதி 2 – பெண் | – | வார்டு எண். 26 |
| 15. சிவசண்முகம் வீதி 3 – பெண் | – | வார்டு எண். 26 |
| 16. சிலேட்டர் ஹவுஸ் வீதி – ஆண் ,பெண் | – | வார்டு எண். 23 |
| 17. சாமிநாதபுரம்(பாலம் அருகில்) –ஆண் ,பெண் | – | வார்டு எண். 23 |
| 18. சாமிநாதபுரம் (கோயில் அருகில் ) – ஆண் , பெண் | – | வார்டு எண். 23 |
| 19. சாமிநாதபுரம் (கடைசி)– ஆண், பெண் | – | வார்டு எண். 23 |
| 20. சீத்தாலட்சமிபுரம் –ஆண் ,பெண் | – | வார்டு எண். 27 |
| 21. சுப்பிரமணியம் வீதி – ஆண்,பெண் | – | வார்டு எண். 28 |
| 22. கங்குவார் வீதி – ஆண் ,பெண் | – | வார்டு எண். 28 |
| 23. அண்ணா நகர் – ஆண் , பெண் | – | வார்டு எண். 29 |
| 24. சங்கரன் வீதி – ஆண், பெண் | – | வார்டு எண். 30 |
| 25. செங்கோட்டையன் காலணி – ஆண் , பெண் | – | வார்டு எண். 30 |

**பொது கழிப்பிடம்**

| | | |
|---|---|---|
| 1. தினசரி பழ மார்க்கெட் – ஆண்,பெண் | – | வார்டு எண். 13 |
| 2. பஸ் நிலையம் – ஆண் ,பெண் | – | வார்டு எண். 21 |
| 3. வாரச்சந்தை–ஆண்,பெண் | – | வார்டு எண். 28 |

மேற்குறிப்பிட்டுள்ள கழிவறைகளில் தண்ணீர் வசதியுடன் கூடிய வாஷ் பேசின்கள் அமைக்க மதிப்பீட்டு செலவினம் ரூ.2,25,000.00 க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண். 367/2022/இ1)

**அலுவலகக் குறிப்பு** : 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2.செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளப்படுகிறது.

**1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மானம் எண். 32**

6. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 26, சிவசண்முகம் வீதியில் உள்ள இரு சமுதாய கழிப்பிடங்களும், பழுதடைந்த நிலையில் உள்ளது. இதனால் பொதுமக்கள் பயன்படுத்த சிரமமாக உள்ளது. எனவே, மேற்படி இரு சமுதாய கழிப்பிடங்களிலும், உள்ள அனைத்து பழுதுகளை சரிசெய்து பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு பொதுமக்கள் பயன்படுத்த உத்தேச மதிப்பீட்டு செலவினம் ரூ. 3.00 இலட்சம் ஆகும். மேற்படி பணியினை மேற்படி பணியினை மேற்கொள்ளவும், செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண். 559/2022/இ1)

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது. தீர்மானம் எண். 33.**

7. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் 2021-2022 இன் கீழ் கீழ்கண்டுள்ள பணிகளை மேற்கொள்வதற்கும் மதிப்பீட்டு தொகையில் மூன்றில் ஒரு பங்கு பொதுமக்கள் பங்குத்தொகையாக செலுத்தவும், இசைவு தெரிவித்து அப்பகுதி பொதுமக்கள் கடிதம் அளித்துள்ளனர்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சம்) | பொதுமக்களின் பங்களிப்புத் தொகை (இலட்சம்) |
|---|---|---|---|
| 1 | ராம் நகர் வார்டு எண்.23 இல் உள்ள நகராட்சிக்கு சொந்தமான பூங்காவில் நடைபாதை அமைத்தல் பணி | ரூ.6.00 | ரூ.2.00 |
| 2 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 10 ஆஞ்சநேயா நகர், சாய் அபிராமி நகர் எக்ஸ்டென்சன் மற்றும் ஏரீஸ் நகரில் உள்ள பகுதியில் சிசிடிவி கேமரா | ரூ.5.32 | ரூ.1.77 |
| 3 | வார்டு எண்.13 பாரதி வீதி இல் பழைய நகராட்சி பாலவித்யாலயா பள்ளி கட்டிடம் பின்புறம் புதிய நூலகம் கட்டுதல் பணி | ரூ.30.00 | ரூ.10.00 |
| 4 | வேங்கம்மையார் உயர்நிலைப்பள்ளிக்கு SHARP (Printer/Copier/Colour Scanner) விநியோகம் செய்யும் பணி | ரூ.0.68 | ரூ.0.23 |
| 5 | வார்டு எண்.25 திரு.வி.க. 4 வது வீதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான உள் விளையாட்டு அரங்கத்திற்கு செயற்கை புல் தரை (Mat) அமைத்தல் | ரூ.2.00 | ரூ.0.67 |
| 6 | வார்டு எண். 24 பிருந்தாவன் கார்டன் பகுதியில் பூங்கா அமைத்தல் | ரூ.6.00 | ரூ.2.00 |
| **மொத்தம்** | | **ரூ.50.00** | **ரூ.16.67** |

மேற்கண்ட பணிகளை நமக்கு நாமே திட்டம் 2021-2022 இன் கீழ் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற்று செயல்படுத்திட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண். 2538/2021/இ1)

**அலுவலக குறிப்பு** :- அ). மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ). கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு 2020-2021 ம் ஆண்டிற்கு நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பொதுமக்கள் பங்குத்தொகை ரூ.18.00 லட்சம் அரசு பங்குத்தொகை ரூ.36.00 இலட்சம் ஆக மொத்தம் ரூ.54.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே ஒரு பணிக்கு ரூ.12.00 இலட்சத்திற்கு அனுமதி பெறப்பட்டது (நகர்மன்றத் தீர்மான எண்.322 நாள்.25.01.2022) போக மீதம் உள்ள ரூ. 50.00 லட்சம் மதிப்பீட்டிற்கும் நிர்வாக அனுமதி பெற்று பணிகளை செய்து முடிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது. தீர்மாணம் எண். 34**

8. கோபிசெட்டிபாளையம் நகராட்சி 30 வார்டுகள் கொண்ட ஒரு தேர்வு நிலை நகராட்சி ஆகும். இதன் பரப்பளவு 7.51 ச.கி.மீ. மக்கட்தொகை 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 59523 ஆகும். தற்போது தோராயமாக 66000 ஆகும்.

இந்நகராட்சி பகுதியில் உள்ள 30 வார்டுகளிலும், நகர்மன்ற தலைவர் பொதுமக்கள் குறைகளை நேரில் அறியவும், நடைபெற்று வரும் திட்டப்பணிகள், பொதுப்பணிகள் ஆய்வு, குடிநீர் விநியோகம், தலைமை நீரேற்று நிலையம், சென்றுவருவதும், தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் ஆகியவற்றினை நேரடியாக ஆய்வு செய்திட வாகன வசதி தேவைப்படுகிறது. தற்போது இந்நகராட்சியில் இரண்டு பழைய ஈப்பு வாகனம் மட்டுமே உள்ளது. எனவே, இந்நகராட்சியில் நகர்மன்ற தலைவர் அவர்களுக்கு புதிதாக Mahindra "Scorpio" வாகனம் ரூ. 16.00 இலட்சம் செலவினத்தில் நகராட்சி பொது நிதியில் இருந்து DGST (தமிழ்நாடு அரசு அங்கீகாரம் பெற்ற விலையில்) விலை விகிதத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் உரிய அனுமதி பெற்று வாங்குவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ. மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ.மேற்படிசெலவினம், நகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது. தீர்மாணம் எண். 35**

9. இந்நகராட்சி பகுதிகளில் வாழும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் கிறிஸ்த்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் ஆகிய இனத்தவர்கள் இறந்தால் அவர்களுக்கு ஈமச்சடங்கிற்கு வழங்கப்படும் தொகை ரூ. 5000/– வழங்கிட அரசு ஆணைய நிலை எண். 105 நாள். 19.10.2020 இல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தொகையினை பயனாளிகளுக்கு 2022 – 2023 ஆம் நிதியாண்டில் உடன் வழங்கவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. (ந.க.எண். 2749/2020/எச்.1)

**அலுவலகக் குறிப்பு :** 1. அனுமதி அளிக்கலாம்.

2. ஈமச்சடங்கு தொகையினை பொதுநிதியிலிருந்து விடுவித்த பின்பு மானயம் வரப்பெற்றவுடன் சரிகட்டி கொள்ளவும், மன்றம் அனுமதிக்கலாம்.

**1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மானம் எண். 36**

10. நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட ஆண்டு குத்தகை இனங்களுக்கு 23.03.2022 ஆம் தேதியன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

1. மில்ரோட்டில் உள்ள நகராட்சி வாரச்சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
2. நகராட்சி பேருந்து நிலையத்தில் பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
3. புதிய பேருந்து நிலைய நவீன கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
4. வாரச்சந்தையில் உள்ள காலியிடத்தில் உள்ள மீன் கடைகளுக்கு சுங்கம் வசூலிக்கும் உரிமம்.
5. நகராட்சி தலைமை குடிநீர் நிலைய மரங்களின் பலன்களை அனுபவிக்கும் உரிமம்.

மேற்கண்ட ஆண்டு குத்தகை இனங்களுக்கு நடைபெற்ற பொது ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | ஆண்டு குத்தகை இனங்கள் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்ட ஆண்டு குத்தகை தொகை ரூ. | ஏலக் கேள்வி |
|---|---|---|---|---|
| [1] | [2] | [3] | | [5] |
| 1 | வாரச்சந்தையில் உள்ள காலியிடத்தில் உள்ள மீன் கடைகளுக்கு சுங்கம் வசூலிக்கும் உரிமம். | கே.செந்தில்குமார்<br>த/பெ. கிருஷ்ணசாமி<br>32, பாரியூர் ரோடு, மேட்டுவலவு,<br>கோபி<br>98431 25164 | ரூ.15,500/– | இல்லை |
| | | எஸ்.சித்ராதேவி<br>க/பெ. செந்தில்குமார்,<br>10.பி.புத்தர் வீதி,<br>டி.ஆர்.ஆர்.நகர்,<br>கோபி<br>89037 55667 | **ரூ.28,500/–** | |

மேற்கண்ட விபரப்படி வரிசை எண். 1 ல் கண்டுள்ள ஆண்டு குத்தகை இனத்திற்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி ரூ.28,500/–க்கு திருமதி. எஸ்.சித்ராதேவி க/பெ. செந்தில்குமார் என்பவரால் அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தப்புள்ளி தொகையானது மற்றொரு ஒப்பந்தப்புள்ளிதாரர் திரு.செந்தில்குமார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகையை விட ரூ.13,000/– கூடுதலாகவும், சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூ.24,989/– ஐ விட ரூ.3,511/– கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரி ரூ.23,818/– ஐ விட ரூ.4,682/– கூடுதலாகவும் உள்ளது.

எனவே உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி குறிப்பிடப்பட்டுள்ள திருமதி.எஸ்.சித்ராதேவி க/பெ. செந்தில்குமார் என்பவரது ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ஏலம் போகாத மற்ற இனங்களுக்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம். (ந.க.எண். 2977/2020/அ3)

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**வரிசை எண். 1 கலம் 2 க்கு கலம் 3 எஸ். சித்ரா தேவி – ன் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**
**ஏலம் போகாத மற்ற இனங்களுக்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி அளிக்கப்பட்டது. தீர்மானம் எண். 37**

11. நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட 34 கடைகளுக்கு 23.03.2022ந் தேதியன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

1. புதியாஸ்பத்திரி வீதி கடை எண். 7 மற்றும் 8.
2. பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 33, 34, 42, 43, 48, 53, 55, 57, 58, 59, 60, 61, 66, 67, 69, 70, 71, 72, 73, 74
3. பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 56, 45
4. பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 20.
5. பழைய பேருந்து நிலைய IUDP கடை எண். 8
6. வாரச்சந்தை கடை எண்.2, 3, 29 மற்றும் 31
7. பழைய ஆஸ்பத்திரி வீதி கடை எண். 16, 12
8. பழைய ஆஸ்பத்திரி வீதி கோழி கடை எண். 2
9. பழைய பேருந்து நிலையம் MUDP கடை எண். 4

மேற்கண்ட கடைகளுக்கு நடைபெற்ற பொது ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. கீழ்க்கண்டவாறு இரண்டு கடைகளுக்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | குத்தகை இனங்கள் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவர்கள் பெயர் | குழு பரிந்துரை செய்த மாத வாடகை ரூ. | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்ட மாத வாடகை ரூ. | ஏலக் கேள்வி |
|---|---|---|---|---|---|
| [1] | [2] | [3] | [4] | | [5] |
| 1 | பழைய பேருந்து நிலைய கடை எண். 8 | குணசுந்தரி க/பெ. செல்வராஜ் 8.ஆர்.கே. சாமி வீதி, கவுந்தப்பாடி | ரூ.2,200/− | ரூ.1,500/− | இல்லை |
| | | முத்தையன் த/பெ. பழனிசாமி, 14, கவுந்தப்பாடி புதூர், கவுந்தப்பாடி, பவானி தாலுக்கா, 96002 67312 | ரூ.2,200 | **ரூ.2,600/−** | |
| 2 | வாரச்சந்தை கடை எண். 29 | எஸ். வேலுசாமி த/பெ. சுப்ரமணியன், 74F. திரு.வி.க.வீதி, சின்னமொடச்சூர், கோபிசெட்டிபாளையம் 638476 96008 31600 | ரூ.2,100/− | **ரூ.4,600/−** | இல்லை |
| | | சி.சுப்ரமணியன், 2சி. சக்திநகர், தமிழ்நகர் எக்ஸ்டன்சன், கோபிசெட்டிபாளையம் 95977 86915 | ரூ.2,100/. | ரூ.4,300/. | |

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில்

1. வரிசை எண். 1 பழைய பேருந்து நிலைய கடை எண். 8 க்கு, திருமதி குணசுந்தரி என்பவரது ஒப்பந்தப்புள்ளியைவிட கூடுதலாகவும், குழு நிர்ணயித்த வாடகை ரூ.2,200/− ஐ விட கூடுதலாக ரூ.400/− சேர்த்து திரு.முத்தையன் த/பெ. பழனிசாமி என்பவர் **ரூ.2,600/−** க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

2. வரிசை எண். 2 வாரச்சந்தை கடை எண். 29 க்கு திரு.சி.சுப்ரமணியம் என்பவரது ஒப்பந்தப்புள்ளியைவிட கூடுதலாகவும், குழு நிர்ணயித்த வாடகை ரூ. 2,100/−ஐ விட கூடுதலாக ரூ.2,500/− சேர்த்து திரு.எஸ்.வேலுச்சாமி என்பவர் **ரூ.4,600/−** க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

   எனவே வரிசை எண். 1 பழைய பேருந்து நிலைய கடை எண். 8 மற்றும் வரிசை எண். 2 வாரச்சந்தை கடை எண். 29 ஆகியவற்றிற்கு அளிக்கப்பட்டுள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

3. ஏலம் போகாத மற்ற கடைகளுக்கு மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம். (ந.க.எண். 301/2021/அ3)

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

1. **வ.எண். 1, கலம் 2 க்கு கலம் 3 முத்தையன் என்பவரின் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**
2. **வ.எண். 2, கலம் 2க்கு கலம் 3 எஸ். வேலுச்சாமி – ன் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**
3. **ஏலம் போகாத மற்ற கடைகளுக்கு மறுபொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி அளிக்கப்பட்டது. தீர்மாணம் எண். 38**

12. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வீரபாண்டி கிராமம் வார்டு B, பிளாக் – 23, T.S.No.13/1, பழைய சர்வே எண். 1261 , பைரவர் நகர், மனை எண்.1 க்கு தமது மனையிடத்தின் வடபுறமாக சுமார் 30 x 16 என்ற அளவில் சாலை விஸ்தரிப்பிற்கான இடத்தினை நகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு ஆவணம் செய்து கொடுக்கிறேன் என 15.03.2022 ஆம் நாளிட்ட விண்ணபத்தில் திரு.K.A.ராஜாராம் என்பவரால் கோரப்பட்டுள்ளது.

மேற்படி, இடத்தினை நகர சார் ஆய்வாளர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் நேராய்வு செய்யப்பட்ட வார்டு B, பிளாக் –23, T.S.No.13/1, பைரவர் நகர் மனைப்பிரிவில் மனையிட எண்.1 இன் வடபகுதியில் B4–B4 திட்டசாலையில் கிழமேலாக செல்லும் ஏற்கனவே உள்ள 23 அடி அகல சாலையில் தெற்கு பகுதி எல்லை 16 அடி அகலத்தில் 30 அடி நீளத்திற்கு 480 சதுரடி பரப்பளவு நிலத்தை திரு.K.A.ராஜாராம் என்பவரிடமிருந்து தானமாக பெற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 460/2022/எப்1)

**அலுவலக குறிப்பு: –** மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது. தீர்மாணம் எண். 39**

13. நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.50977/2018/டிபி3 நாள்.07.03.2019 இல் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 இல் வெளியிடப்பட்டுள்ள நிலையில் உள்ளாட்சிகளில் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்குமாறு தொடர்பாக விதி எண்.23 இன் படி தொழில் சார்ந்த வல்லுநர்கள் நியமனம் செய்தது குறித்து நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்காணும் சுற்றறிக்கை வரிசை எண்.6 இல் பரிசோதனை குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் சம்மந்தப்பட்ட விண்ணப்பதாரரிடம் ரூ.5000/– பதிவு கட்டணமாக பெற்றுக்கொண்டு பதிவு செய்யலாம் என்றும் பதிவு செய்யப்பட்ட தொழில் சார்ந்த வல்லுநர்களின் பதிவேடு பராமரிப்பதுடன் விவரப்பட்டியலை ஒவ்வொரு ஆண்டும் புதுநிலைப்படுத்தி ஏப்ரல் மாதத்தில் மன்றத்தின் பார்வைக்காக வைக்க வேண்டும் மற்றும் அலுவல் சார்ந்த வலைதளத்தில் பதிவிட வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்காணும் அறிவுரையின் படி இந்நகராட்சியில் 2022–2023 நிதி ஆண்டு ஏப்ரல் மாத துவக்கத்தில் நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட பட வரைவாளர்கள் 44 நபர்கள் பதிவு செய்துள்ளனர் என்பதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண். 670/2019/எப்1)

**அலுவலக குறிப்பு :–** மன்றம் பதிவு செய்யலாம்.
**பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது. தீர்மாணம் எண். 40**

(ஒப்பம்) – என்.ஆர். நாகராஜ்,
தலைவர்,
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

// உண்மை நகல் உத்திரவு படி//

ஆணையாளர்,
கோபிசெட்டிபாளையம் நகராட்சி.